சேனாபதி முனிவர் அருளிச்செய்த

மணவாளமாமுனிகள் நூற்றந்தாதி

மாவளரும் கோயில் மணவாள மாமுனிவன்
பூவளரும் பொன்னடிமேல் பாமாலை - நாவலவன்
சேனாபதி முனிவன் சீருடை அந்தாதிதந்தான்
மேனாடரும் கற்க ஏய்ந்து.

குணவாளன் இந்திரைகோன் குணங்கூறும் மாறன்தாள்
தணவாத எதிராசன் தாள்வணங்கும் தன்மையனாய்ப்
பணவாதி சேடனருள் பரனேவ அவதரித்த
மணவாள மாமுனிவன் மலரடியே அடைநெஞ்சே. 1

நெஞ்சுருகிக் கண்பனிப்ப நெடுமாலை நமன்றெழுநம்
தஞ்சமருள் மாரிபுகழ் தாம்பரவும் எதிகட்கொரு
வன்சரணே வணங்கியநம் மணவாள மாமுனிவன்
இன்சரிதை யின்சீரை இயம்பியெழாய் என்வாயே. 2

வாயாலும் மெய்யாலும் மனத்தாலும் பெரும்பூதூர்
மேயானை அடிபரவும் மெய்யடியார் தாள் நினைந்து
மாயாத மணவாள மாமுனிவன் குணங்களையே
கூசாமல் வணங்கியெழாய் குறியுடைய என் தலையே. 3

தலையான எதிராசன் தன்வடிவை நினைக்கமனம்
விலையாதும் இல்லவன்சீர் விழுங்கியிட வாயடிமை
நிலையான முறைசெய்ய நிச்சலுங்கை வேண்டும் திரு
மலையாழ்வார் அருள்பெற்ற மணவாள மாமுனியே. 4

முனியேறாம் எதிராசன் முழுத்தகவால் முப்பதத்தின்
இனியபொருள் நிலைவேண்டி இன்பமுடன் அவனடியில்
குனியுமெவரும் மதியடையக் கருதுமண வாளமுனி
தனியருளே நினைந்தடியேன் தாரணியில் மகிழ்வேனே.5

மகிழ்மாறன் அடிசூடும் எதிராசன் மலரடியின்
நிகழ்காதற்கு இடைச்சுவரை நீக்கியருள் என்றிரந்து
மகிழுமன மணவாள மாமுனிவன் குணங்களையே
புகழாத புலவர்கள் இப்பூமிக்கோர் பெருஞ்சுமையே. 6

மைந்தன் எதிராசரருள் மன்னமிக நைச்சியத்தை
ஐந்தாறு கவிகளினால் ஆர்த்த மணவாளமுனி
பைந்தாமரை அடியைப் பரவுமவர் தாளிணைக்கே
நைந்துருகும் என்நெஞ்சம் நையாது பிறருக்கே. 7

அருக்கன்குல தெய்வவணி அரங்கன் வரங்கொண்டு
செருக்கடித்த எதிராசன் திருவருளே அரணாக
இருக்குமண வாளமுனி இணையடியை இறைஞ்சுமவர்
திருக்கமலத் தாளிணையே தித்திக்கும் அடியேற்கே. 8

ஏற்கும் எதிராசனுடை எழிற்பதத்தின் சேவைதனைச்
சீர்த்திருவாய்மொழிப்பிள்ளை செழுந்தகவால் தந்ததனை
மேற்கிளர அருளென்று மேவும் மணவாளமுனி
ஆர்க்கருளும் அடியேனுக்கு அல்லதுநீர் சொல்லீரே. 9

ஈரேழு புவனத்தார் இறைஞ்சுபுகழ் எதிராசன்
சீரேற்ற நன்றியலுஞ் செம்மையினால் அருள்சூடி
நேரேற்றம் இல்லாமல் நிகழும் மணவாளமுனி
பாரேத்து பெரும்புகழைப் பாடிமனம் களித்தேனே. 10

தேனமரு பூம்பொழில்சூழ் திருக்கச்சி நகர்ப்பொய்கைப்
பூநடுவில் உதித்தமுனி புகழ்பாடு எதிராசன்
மாநிலவில் வாய்மடுக்கும் மணவாள மாமுனிவன்
ஞானவொளிக் கலையல்லால் நாம் என்றும் ஓதோமே.11

ஓதக் கடல்மல்லை ஒளிசூழ வந்துதித்த
பூதத்தார் இயலோதும் பூதூரின் மாமுனிவன்
பாதத்தைப் பலகாலும் பரவுமண வாளமுனி
கோதற்ற தென்மொழியைக் கொண்டாடிக் கூறுதுமே.12

கூறியசீர் மயிலையர்கோன் குணங்கொள்ளும் எதிராசன்
மாறிலடி வணங்கிமகிழ் மணவாள மாமுனிவன்
வீறுடைய மெய்ம்மொழியை விரும்பியரும் பொருளனைத்தும்
தேறுமவர் எஞ்ஞான்றும் தேசிகராய்த் திகழ்வாரே. 13

வார்புனல்சூழ் மாமழிசை வாழ்வெய்த வருஞ்சோதி
சீர்புகழும் எதிராசன் சீலமெல்லாம் குடைந்தாடும்
ஓர்புனிதன் மணவாள யோகிசெயு முலகாரியன்
ஏர்பனுவல் வியாக்கியையை எண்ணுமவர்க்கு ஏதரிதே.14

அரிதேவன் அல்லாதார் அவனுருவென்று உரைக் குருகா
புரிதேசிகன் பாதம் புகழும் எதிசேகரன்றன்
சரிதைநினைந்து உள்ளுருகும் சாலமண வாளமுனி
சொரிதேறல் கலைநுகரும் சோமபருக்குப் பசியேதே? 15

ஏதேனும் ஆவேன் நான் எம்பெருமான் பொன்மலைமேல்
ஈதேநங் காதலெனும் எழில்வஞ்சிக் களத்திறைவன்
பா தேங்கும் எதிராசன் பதம் கருது மணவாள
மாதேசிகன் கலையே மற்றதுமோர் அமுதுண்டே. 16

துண்டித்துப் பரமபதம் தூநெறியைத் தாபித்துக்
கொண்டுய்த்த வில்லிபுத்தூர்க் கோன்குணந்தேர் எதியரசைப்
பண்டுற்ற மணவாள மாமுனிவன் பனுவல்களின்
ஒண் தத்துவப் பொருளை ஓர்ந்திடுவார் உறங்காரே. 17

காரேறு கருமுகில்போல் கண்வளரும் அரங்கேசன்
பாரேறு புகழ்பாடித் திருப்பள்ளி யுணர்த்துமொரு
போரேற்றைத் திருமண்டங் குடியிலுறும் எதிராசன்
சீரேறு மணவாளச் சீயருரை ஓதுமினே. 18

ஓதுமொரு மாமுனியை ஓர்ந்துபுகுந்து அரங்கனடிப்
போதுமுதல் முடியளவாம் போற்றியெனும் உறையூரான்
மீதுமுயல் எதிராசன் மணவாள மாமுனியாய்த்
தீதுமுகந்து அறியாத தென்மறையை வளர்த்தானே. 19

தானேதன் வழிப்பட்ட தாமோதரன் பணியைக்
கானேறிப் பறித்து மனு கற்றுய்ந்த நம்குறையற்
கோனேத்தும் எதிராசன் கோமளவான் குணம்பாடி
வானேற்றும் மணவாள மாமுனிவன் மன்னுரையே. 20

மன்னு திருவாய்ப்பாடி மங்கைகளில் தானொன்றாய்
தன் உருக்குமணிக்கணவன் தகவடைந்த புதுவைமயில்
என்னண்ணன் எனவுவந்த எதிராசன் தாளிணையை
முன் நண்ணும் மணவாள முனிமொழியை முரலுமினே.21

முரலுமிவர் பதினொருவர் மொழிகளுக்கோர் இலக்காகும்
பரன்பெரிய பெருமாளைப் பணியும் எதிராசன்தாள்
விரல் தொடங்கி முடியளவும் விரும்பும் மணவாளமுனி
தரமறியும் பெரியோர்தம் தாளிணையென் தலைக்கணியே. 22

அணியரங்கன் அடிவணங்கும் அருட்பெரிய பிராட்டிதனைப்
பணியும் எதிராசனடி பரவுமண வாளமுனி
பிணியகல அருள்செய்த பிரபந்தங்கள் பெரும்பொருளைத்
துணியுமவர்க்கு ஒருகாலும் துயருதிக்க கில்லாவே. 23

இல்லாத குணங்காட்டி இன்னுயிரை இறைசேர்க்கும்
வல்லாளை அருட்பெரிய பிராட்டிதனை வணங்காமல்
செல்லாத சேனையர்கோன் செயல்பாடும் எதிராசன்
சொல்லாழு மணவாள முனிசொற்கள் நன்னூலே. 24

கண்ணனைமா வுடன்மருவக் கற்பித்த வன்கிரிசை
திண்ணனவே சுமக்கும் சேனையர்கோன் தாள்வணங்கும்
அண்ணல் அருள்மாறன் தாளடையும் எதிராசனையே
நண்ணு மணவாளமுனி நற்கழலே நம்துணையே. 25

நந்தாதை மதுரகவி நற்கலையைத் தான்சவித்து
சிந்தாமல் சடகோபன் சீரருள்சேர் நாதமுனி
முன்தாழும் எதிராச மூர்த்திமண வாளமுனி
அந்தாதி நூறையும்நாம் அனுசந்தித்து இருப்போமே. 26

திருப்பொலி அருள்நாதன் சேவடிசேர் உயக்கொண்டார்
பருப்போடு பொரும்தாள்கள் பணியும் எதிராசனிடை
விருப்போங்கு மணவாள முனிவிரித்த கலையோதி
இருப்போமுக்கு இனியொருத்தர் இயல்கேட்க வழியென்னே. 27

வழக்கென்ன உயக்கொண்டார் வன்சரணாம் பதுமத்தின்
நிழற்கொண்டு நிகழ்மணக்கால் நம்பியைநண் எதிராசன்
கழற்கண்ட மணவாள முனிகலையை விரும்பாதார்
விழக்கண்ட நாமவற்றை விரும்பாத நாளுண்டே. 28

நாளவரிதாள் தொடருமவர் நற்பதத்தை அடைந்துய்ந்த
ஆளவந்தார் திருவடியில் அன்புறும் எம்பெருமானார்
தாளுவந்த மணவாள முனிதரு நூற்றந்தாதிக்கு
ஆளவன்தாள் பரவாமல் ஆராகக் கடவாரே. 29

கடமாக ஆளவந்தார் கழல்பணிந்த பெரியநம்பி
உடன்வர அடிபரவும் எதிராசன் உரைதேறும்
மடநெஞ்ச மணவாள மாமுனிவன் மறையோதும்
திடநெஞ்சர் அடியேனைத் திருத்தியருள் செய்தாரே. 30

ஆரேசீர் அமுதனுரை அந்தாதித் தேவதைசேர்
கூரேசன் குருகேசன் குருமுதலியாண்டான் போல்
காரேசீர்ப் பெருந்திரளைக் கருதும் மணவாளமுனி
சீரே சிந்தனைசெய்வார் சேவடிசேர்ந் து அகலோமே. 31

தகவுடைய எதிராசன் தாளடையும் எம்பார்தாள்
மிகவடையும் மணவாள மாமுனிவன் மிழற்றியசொற்கு
அகமுடையும் அதிகாரி யாரேனும் ஒருவரேதான்
செகமடையப் பரமார்த்தஞ் சிந்திக்கத் திருவுடைத்தே.32

உடையவராம் எதிராசர் உயர்தகவால் எம்பார்தாள்
அடையும் பராசரபட்டர்க்கு அற்ற மணவாளமுனி
தடையறவே தமிழ்மறைக்குத் தகவுசெய் நூற்றந்தாதித்
தொடையதனைப் புலவர்கள்தாம் துதித்துநலம் பருகுவரே. 33

பெரும்பூதூர் முனிவன் அடிபேணிய நஞ்சீயரையே
விரும்பும் மணவாளமுனி விரிநூற்றந்தாதிதனைக்
கரும்பூறு சாறமுதாய்க் கருதாமல் திரிவார்கள்
அரும்பாவிகள் கண்டீர் அவருறவை அகற்றுமினே. 34

அகத்தில் எதிராசன்தாள் அகலாத நம்பிள்ளை
வகுத்த மலரடிவணங்கு மணவாளமாமுனிவன்
செகத்துக்கா உபதேசஞ் செய்தமணி மாலைதனை
அகத்துக்கோர் அணியாக அணிவார் என்முடிக்கணியே.35

முடிக்குரிய எதிராசன் முழுநலனும் முகந்துருகும்
படிவடக்குத் திருவீதிப் பிள்ளையைச்சேர் மணவாளன்
அடிக்கமலத்து அன்புறுவார் அவன்மொழியை ஆராய்ந்து
படிப்பல்லால் பற்பல்கால் பாழ்பொழுது போக்குவரே. 36

உவரோடு தமரேத்தும் உத்தமர் எம்பெருமானார்
அவரே தம் சரணாக அடையும் உலகாரியனை
இவரே நம் குலதெய்வம் எனத்துணிந்த மணவாளர்க்கு
எவரேனும் ஆளானார் எழுபிறப்பும் எமக்கரசே. 37

கரைசேர்க்கும் எதிராசன்கண் திருவாய் மொழிப்பிள்ளை
உரைசெய்த பழைவழியே ஓதும்மண வாளமுனி
விரையேற்று மலரடியை விரும்புமவர் எங்குருக்கள்
நிரைசேர்ந்து நிச்சலுமே நினைந்தென்றும் இகழாரே. 38

கழலாத முக்கோலான் கருணைநிதி எதிராசன்
கழலாடித் திருக்குருகைப் பிரான்பிள்ளான் வியாக்கியையின்
நிழலாதும் இகழாதே நிற்கும் மணவாளமுனி
சுழலாத தொல்வழியைச் சூரிகளுக்கு அருள்வானே. 39

அருளாழி எதிராசன் அடிதாழும் நஞ்சீயர்
மருளாமல் செய்ததமிழ் வியாக்கியையை வாய்ந்தருளும்
பொருளாதும் சோராமற் புகலும் மணவாளமுனி
தெருளாழித் தீக்கதியைத் தேய்ந்தழியத் தீர்த்தானே. 40

தீர்த்தன் எதிராசனடி சேர் ஆச்சான் பிள்ளைமுன்னாள்
சீர்த்ததமிழ் வியாக்கியையைச் செப்பும் மணவாளமுனி
வார்த்தைகளில் ஒரொன்றே வானேற்றி உய்த்திடுமால்
பார்த்தவனைச் சேவித்தார் பாக்கியத்தைப் பணித்தாமோ.41

தாம் முன் இரும்பூதூர்க்கோன் தான்வணங்கும் பரமபதம்
தீமுனிந்து சொரிவடக்குத் திருவீதிப் பிள்ளைசொல்லால்
தூமனனாய்த் தமிழ்மறையைத் தொகுத்துரைக்கு மணவாள
மாமுனிவன் மலரடியை மருவாதார் வாழாரே. 42

ஆழ்வார்கள் அருமறையை ஆர்த்த எதிராசனையே
சூழ்வாதி கேசரிசொல் சூரிகளுக்கு அருள்செய்யும்
தாழ்வாதும் இல்லாத தகவன்மண வாளமுனி
வாழ்வாக மண்ணவர்க்கு மந்திரத்தை விரித்தானே. 43

விரிபுகழ் எம்பெருமானார் விசயத்தால் அவர்க்காளாய்ப்
பெரியபுகழ் அருளாளப் பெருமாளெம் பெருமானார்
உரியமொழிகளை அருளால் உரைக்கு மணவாளமுனி
தெரிவரிய திருப்புகழைத் தேருமவர் தேவர்களே. 44

ஏறுபுகழ் உலகாரியன் இயல்தத்துவத் திரயத்தின்
ஆறுவிரித்து எதிராசர்க்கு ஆட்செய் மணவாளமுனி
கூறுகலை அதிகரிக்கும் கூர்மதியோர் அல்லாமல்
வேறுசிலர் வேதாந்த விழுப்பொருளைக் காணாரே. 45

காணாதர் கபிலர்குரு கபாலி குதர்க்கமதங்கள்
காணாத படியழியக் கலைசெய் உலகாரியன்சொல்
பூணாக எதிபதியைப் போற்று மணவாளன்தாள்
பேணாத சேதனரைப் பேயென்பர் பெரியோரே. 46

என்பரம காருணிகன் எதிராசன் என்றிறைஞ்சி
அன்பருய உலகாரியன் அருள்வசன பூடணத்தை
முன்பருளி நமக்குரைத்த மூர்த்தி மணவாளமுனி
பொன்பற்றாந் திருவடியைப் போற்றுமவர் புகலெமக்கே.47

மக்கள் இறை பிறவிகுரு மாதாபிதா மாதர்தனம்
தக்ககதி சரணெல்லாம் தமக்கு எதிராசனென்று
மிக்கடைந்த வையகுரு மெய்க்கலையை விவரிக்கும்
முக்கியசீர் மணவாள முனிமொழியில் மூழ்கினமே. 48

இனமேதும் இல்லாமல் இலகும் இராமானுசனை
தினமேத்தி வையகுரு திருத்தம்பி செய்கலையை
மனமேத்தி விரித்தருளும் மணவாள மாமுனியைத்
தினமேவும் அடியார்க்குத் தரமறிந்து மேவுமினே. 49

மேவி எதிராசனையே மெய்ப்பொருளைச் சுருக்காகத்
தாவித்த விளாஞ்சோலைப் பிள்ளைதரத் தனிமொழியைப்
பாவித்த மணவாள மாமுனிவன் பதங்களையே
சேவித்த திருவாளர் செகத்துக்கோர் செழும்பூணே. 50

பூணூலும் முக்கோலும் புனைசிகையும் துவருடையும்
சேணூர்த்துவ புண்டரமும் சேர்ந்த எதிசேகரன்முன்
நாள் நூற்றதி னிருபதாண்டு நான்மறையை நோக்கிப்பின்
காணூலறி வரவரனாய்க் காத்தளித்தான் தமிழ்களையே. 51

களைகளெழாக் கருணையினால் காத்தருளும் எதிபதியே
களைகண் எமக்கெனக்கருதிக் களித்தமண வாளமுனி
விளைகழனி அருட்பயிர்க்கு விரும்புமவர்க்கு அரும்பிறப்பாம்
தளைகழல அருளல்லால் தளர்ந்தவர்க்கு ஆர் தாவளமே.52

வளமிக்க எதிராசன் வண்மையினால் உய்ந்தமையால்
உளமகிழும் மணவாள யோகி உப தேசத்தால்
இளமதிபோல் மதிகிளைக்கும் இலகுஅட்ட திக்கயங்கள்
உள் அவன்றன் திருவடியை உலகர் அடைந்து உய்வதற்கே.

தர்க்கத்தால் வேண்டிற்றைத் தாபிக்கச் செருக்கிருக்க
முற்குருக்கள் உபதேசம் முக்கியமெனத் தெளிந்து
கற்குமண வாளமுனி காண்மின் எதிராசனவன்
நிற்கமற்றோர் கற்பித்த நிலைநமக்கு வேண்டோமே. 54

வேண்டாமல் வெறும்புலவர் வீழ்பொருளை மேலையர்சொல்
தாண்டாத எதிராசன் தாள்வணங்கும் வரயோகி
சேண் தாமரைத்தாள்கள் சென்னிக்கோர் மணிமுடியாய்
பூண்டார்க்குப் பூமுடியும் பொன்முடியும் பரமாமோ. 55

மாமேகம் எனவண்மை இளையாழ்வா ரைத்(துதித்தே)
தாம் ஏக சிந்தையனாய்த் தரித்தவர வரமுனியை
நாமேது நண்ணுவதென்று அகலாதே நற்படியே
யாமேவி வணங்குதும்வா நற்றினத்தால் நன்னெஞ்சே.56

நன்னகராம் பூதூர்க்கோன் நலமுரைக்கும் மணவாளன்
பொன்னடியாம் செங்கமலப் போதுகளைக் கனவிலும்நாம்
சென்னியினிற் சூட்டவரும் சேமமெல்லாம் ஆகிலும்நாம்
மன்னியிட வரைசுமந்து மறுமையிலும் மாயோமே. 57

மெய்யன் எதி ராசனையே மேவுமண வாளமுனி
செய்யதிருவடிப்போதைச் சென்னியினால் தரித்தனின்
மொய்யசெழுந் துகளாடி மோந்திதயத் தழுத்தியிட்டால்
உய்யவகை தேடிநமக்கு உளந்துளங்க வேண்டாவே. 58

துளங்காமல் எதிபதியை துதிக்கும் மணவாளமுனி
உளங்காலுஞ் செங்கமல உள்ளிதழ்போல் திருவிரலும்
விளங்கலைமேல் வெண்முளைபோல் இலகுகிரும் புறந்தளிர்போல்
வளங்காட்டும் புறங்காலும் வந்தடியேன் மனத்துளவே.59

துளவமுடன் மணிவடமும் தோன்றுதிருப் பவித்திரமும்
வளபுரிநூ லுடன்தரித்து வாழ் எதிராசனைவணங்கு
களபமெனத் திகழும்வர யோகிதிருக் கணைக்காலின்
வளமதணி புறவடிபோல் வாழ்ந்திடுமென் மழைமதியே.60

மழுங்காத எதிராசன் வாய்மடுத்த சேடமல்லால்
விழுங்காத மணவாள மாமுனியின் விழுப்பமுடை
முழுங்காலைச் சிந்தித்து முப்பொழுதும் வினைப்பிறவிக்கு
இழுங்காது மில்லாமல் எழக்கிள்ளிப் பொகட்டேனே. 61

கட்டேது எமக்கு இனிமேற் காமுறுசீர் எதிராசன்
மட்டேதுமில் சீரின் மன்னுவரயோகி துவர்பா
பட்டேசூழ் திருத்துடையைப் பலகாலும் நினைந்தல்லால்
விட்டேசும் பிறர்சிரிப்ப வாய்வெருவப் பெற்றனனே. 62

பெற்றிமையோன் எதிபதியைப் பேணும் மணவாளமுனிக்கு
அற்று இமையாதிருந்து அடியேன் அவன் உதரபந்தனத்தைப்
பற்றியல் மிகநோக்கம் பற்றிதலைக் கொண்டபின்னால்
மற்றிமையோர் ஆட்சிதனின் மனம்மன்னி மாந்தேனே. 63

மாந்தர் இராமானுசர்க்கே மனமுருகி மற்றறியா
காந்தமண வாளமுனி கமலமணித் துளவவடம்
சேர்ந்ததிருப் பவித்திரமும் செபமயமே புரிநூலும்
சேர்ந்தகன்ற திருமார்பும் எங்ஙனம்நான் மறப்பதுவே. 64

மறமறியா எதிபதியை மறவாத வரயோகி
அறமுறையும் முக்கோலும் அஞ்சலியுந் திகழ்திருக்கைத்
திறமறிந்து தினந்தினமுஞ் சிந்தித்துத் தேறினபின்
அறமறுகும் இப்புவியில் அடிக்கொதிப்பை அடைந்தோமே. 65

அடையாளமாய் அமுதம் அக்கிணற்றில் சுமந்தாழும்
படையானை எதிபதியை உள்ளுமண வாளமுனி
கிடையாத வலம்புரிபோற் கிளரொளிசேர் திருக்கழுத்தை
நடையாக நினைந்துருகி நல்லவர்க்காட் பட்டோமே. 66

ஆட்பட்ட இலக்குமணர்க்கு அற்றமண வாளமுனி
தோட்படை எழுச்சிகளும் துயமணக்கும் திருவாயும்
சேட்பட்ட திருமூக்கும் திருக்காதும் நினைந்தடியேன்
கோட்பட்ட சிந்தையனாய்க் கொடுந்தசையைத் தூர்த்தேனே. 67

தூராத காதலுடன் துவருடைய எதிராசன்
சீராதும் சோராமே சிந்திக்கும் வரயோகி
ஆராதரத் தடங்கண்ண அழகுக்கே தோற்று அவன்தன்
ஆராதனைக்கு இசைந்தடியேன் என்னினிமேல் பரந்திருக்கே. 68

இனியத்தில் வேறுண்டோ இளையாழ்வார் திருப்புகழாம்
கனியதனில் சுவடறிந்து கவர்ந்துய்ந்த மணவாள
முனியதிபன் திருப்புருவ முழுக்கருப்புச் சிலைநினைந்து
தனியதொரு பேரின்பம் தழைத்தடியேன் தழைத்தேனே. 69

தழைத்தபெரும் பொழிற்பூதூர் தனிநாதன் திருவருளால்
பிழைத்த மணவாளமுனி பிறையொளியத் திருநுதலும்
குழைத்தணிந்த திருமணுமென் கூர்மதியில் தரித்தபின்னர்
அழைத்தடியேன் தனையவனே யடிமைதிருத் திண்ணனவே. 70

திண்ணனவே எதிராசன் சேவடிசேர் ஆயியிடம்
நண்ணி நமன்றாசாரிய விதயவுரை தான் கேட்கும்
அண்ணல் மணவாளமுனிக்கு அனுதினமும் அன்புடனே
வண்ணமலர் சாத்துமவர் வானவராய்த் திகழ்வாரே. 71

வார்புனல்சூழ் பூதூர்மன் வளமுரைக்கும் உலககுரு
சீர்வசன பூடணத்தின் செழும்பொருளைச் செகமறிய
நீர்மையுடன் வியாக்கியையை நிருமித்த வரயோகி
கார்முகிலைத் தினந்தோறும் கழல்பணிவார்க்கு ஈடிலையே. 72

இலையெதி ராசற்குநிகர் இவ்வுலகில் குரவரென்று
நிலைநிறுத்தும் அருளாளப் பெருமாளெம் பெருமானார்
கலையறிந்து கருத்துரைக்கும் கருணைமண வாளமுனி
மலரடிக்கு ஆள் அல்லாதார் வையகத்து வழங்காரே. 73

காரேயும் கருணை இராமானுசனைக் காசினியில்
நேரேகண்டு அடிபணிய நியமித்த சடகோபன்
சீரேயும் தமிழ்மறைக்குச் சிறந்தகுரு இவரென்று
பேரேயும் மணவாள முனிகழலைப் பிரியோமே. 74

மேதினியில் சித்திரையில் ஆதிரைநாள் விளங்கவென்று
பூதூரில் வந்துதித்த புனிதன் எதிராசன்தன்
பாதமலர்க்கு ஆளான பாகவதர் திலதமெனப்
போதமுளோர் புகலும் மணவாளமுனி புவிக்கரசே. 75

அரசாகும் எதிகளுக்கு என்று அகிலவுலகும் பணியும்
பரமனிராமானுசர்க்குப் பாங்கான பத்தனென்னும்
வரவரமா முனிவன் இந்த வையகத்தில் வந்திலனேல்
உரைபெறு நற்றமிழ்வேதம் உலகறிவார் எவருண்டே. 76

உண்டோஓ வெதிராசற் கொருவர் நிகர் என்றுரைக்கும்
வண்டாருந் தொடைமௌலி மணவாள மாமுனிவன்
விண்டலர்ந்த மலர்ப்பதத்தை விரும்பியனு தினம்வணங்கும்
தொண்டர்தமக்கொருகாலுந் துயருதிக்க கில்லாவே. 77

வேதாந்த விழுப்பொருளின் மேலிருக்கும் அரங்கேசர்
நாதன் நமக்கென்றுரைக்கும் நற்குணனாம் எதிராசன்
மாதகவால் எவ்வுயிர்க்கும் வாழ்வளிக்கும் வரயோகி
பாதமடை பத்தர்பதம் (பணிந்தேத்திப்) பற்றுமினே. 78

மின்னுபுகழ் எதிராசன் வீறுரைக்கும் வரயோகி
துன்னுபுகழ் நாடோறும் துதிக்கும் அடியாரவர்கள்
பன்னுமொழியே சுருதி பார்வை செடிக்குத்தீயே
என்னுமது முன்னொருகால் இயம்புவர் எம்பெரியோரே. 79

பெரியோரும் சிறியோரும் பித்தரும் நற்பத்தருமே
பிரியாது வந்திறைஞ்சும் பிறங்குபுகழ் எதிராசன்
மருவாரும் மலரடிக்கீழ் வணங்கும் எழில் வரயோகி
அருளேநம் அனைவர்க்கும் அதிசயத்தைத் தரவற்றே. 80

வற்றாத புனற்பூதூர் மன்னடியைச் சேர்ந்துநங்கள்
வற்றாத பவக்கடலை வற்றநினைவுற்றபரன்
செற்றாரைச் செற்றவர யோகிதிருத் தாளிணையாம்
பொற்றாமரைப் போதைப் பூணாகத் தரிப்போமே. 81

தரிப்போமே தாரணியில் சகலகலை கற்றுணர்ந்து
கரிப்போமே சமுசாரக் கடலை மிகவும் கலைகள்
விரிப்போமே எதிபதிதாள்மேவு வரவர முனியருள்கொண்டு
இருப்போமே ஏற்றருஞ்சீர் இமையவர்கள் இனஞ்சென்றே. 82

சென்றுகலியிருள் தன்னைச் செழுமறையின் ஒளியதனால்
கன்றும் எதிராசன் எழிற் கண்ணனடி காட்டிலனேல்
இன்றுயிர்கள் அறிந்துய்ய எளிதோதான் என்றுரைக்கும்
துன்றுபுகழ் வரமுனிவன் தூயதமிழ் மறைக்கரசே. 83

சேமங்குரு கையர்கோன் திருவடியென் றென்றுபணிந்து
தாமமடி யார்க்கருளுந் தகவன் எதி ராசனடித்
தாமம் முடிக் கணியுமண வாளமுனி பூந்திருத்தாள்
பூமதுவுண் வண்டினமாம் பூசுரர்கள் என்துணையே. 84

துணர்பொழில்சூழ் அரங்கேசன் தொல்சீரின் மன்னும் எதி
கணமதுக்குத் தலைவன் இராமானுசநற் கழற்கமல
மணமிகவண் மணவாள மாமுனிவன் கலைபொருள்கள்
குணமுடனே அடியவர்க்குக் கூறுகின்றது அதிசயமே.85

சயமேவும் எதிராசன் அடிக்கடியன் நானென்று
துயமுடனே சகலமறைத் துய்யபொருள் உரைத்தெமக்குப்
பயனளிக்கும் வரயோகி பாருலகில் வந்திலனேல்
நயமறிவார் இலையென்று நாவலர்கள் ஓதுவரே. 86

ஓதுமறையோர்க்கு இனிதாய் உரைத்தருளும் ஒள்ளியநூல்
தீதில்சிரீ பாச்சியத்தோன் சீர்மன்னு வரயோகி
மேதினியில் உதித்தபின்னர் விளங்கியசெந் தமிழ்மறைகள்
பேதமறக் கற்றுணர்ந்து பெருமைபெறு மின்களின்றே.87

இன்தமிழின் பொருளெல்லாம் இவ்வுலகில் அறிந்துரைக்கும்
துன்றுபுகழ் ஆரியர்கள் துதிக்கும் எதிராசர்புகழ்
நின்றுரைசெய் வரயோகி நீணிலத்தில் ஒருமரத்தை
சென்றடையப் பரமபதஞ் செய்தருளும் நீர்மையென்னே.88

என்போலும் பிழைசெய்வார் இவ்வுலகில் இல்லையென்றும்
உன்போலும் பொறுத்தருள்வார் ஒருவரிலையே யென்றும்
அன்போடன்று எதிராசர்க்கு அதிசயஞ்சொல் வரமுனிவன்
பொன்போலும் அடிமுதலாப் போற்றுமின் நீர் முடியளவே. 89

முடியழகும் விழியழகும் முகத்தழகும் திருமேனிப்
படியழகும் தூய்முறுவல் பவளநிகர் வாயழகும்
கடியழகும் கரத்தழகும் கண்டுமகிழ்ந்து எதிராசர்
அடிபரவும் வரமுனிவன் அடியழகும் விடவற்றே. 90

வற்றாத பவக்கடலை வற்றுவித்து அந்தாமத்தில்
நற்றாதை பதமளிக்கு நம்மெதிராசன் பதத்தை
பற்றாகப் பற்று மணவாளமுனி இவ்வுலகின்
முற்றாது எம் தீவினையை முடித்தவகை அறியோமே. 91

மேவாத சமயிகளும் மேவியடி பணிகின்ற
மூவாத கதிகள்தரு மொய்ம்பு எதிராசற்கினிய
பாவாருந் தமிழ்மறைக்குப் பாங்கான குருவென்று
தேவாதி தேவனுமே செப்புமண வாளனையே. 92

மணவாள மாமுனிவன் வண்மைதிகழ் எதிராசன்
குணமேவு நற்பரமன் கூர்மதியோர் குருக்களெல்லாம்
துணையாகத் தொழுதுதினந் துதிக்கும் அரவரசாகும்
இணையாரும் இல்லாதிங்கு எழிலரங்கம் இலங்குவனே. 93

இலங்குதிகிரியினொளியால் எழில் அத்தி கிரிமாலும்
கலங்கி எதி பதியளித்த காரணமும் மாமுனிவன்
துலங்கிய நற்குணங்களையும் தொல்லுலகோர்க் களித்தருளும்
வலங்கொள்மணவாளமுனி மன்னியசீர் வாழ்த்துமினே. 94

வாழ்த்துமின்கள் நாடோறும் மாறனடி பணிமுனிதாள்
தாழ்த்துமுடி மணவாள மாமுனிவன் தன்னருளாற்
சூழ்த்தவினைத் துற்றைமுற் றரத்திப்பின் நல் வனந்துழைக்கும்
மூழ்த்தபெரு நீருலகீர் முத்திதரும் முறைமுறையே. 95

முறையுணரத் தமிழ்மறையை மூதுலகோர்க்கு அளித்தருளும்
நறைவகுள மாறனடி நண்ணும் எதிராசர்புகழ்
திறலுறுநற் சிந்தைமணவாளமுனி செய்கலையும்
நிறைபுகழும் நெஞ்சில்வைத்து நீடுலகில் நில்லுமினே. 96

நிற்கின்ற திருமலையும் நீள்விசும்பும் பாற்கடலும்
ஒக்கவளர் எதிராசர் ஓங்குபுகழ் இவ்வுலகில்
மிக்கவருள் மணவாளன் மெய்க்கலையில் மனமகிழும்
தக்கமறை யோர் எனக்குத் தாரணியில் வான்துணையே. 97

துணையாளன் வயலரங்கன் தொல்சீரை ஏத்துமவர்க்கு
இணையில்லை என்றுரைக்கும் எதிராசன் எங்கதியென்றுணர்
மணவாள முனியோது கலைகளை உள் நினைந்தார்கள்
இணைமலர்த்தாள் இறைஞ்சுமவர் எழில்விசும்பு க்கிறையவரே. 98

இறையுமறி வில்லாத ஈனரையும் தன்னருளால்
நிறைமதியர் ஆக்கியருள் நின்மலனாம் எதிராசன்
நறைமலர்தாள் முடிக்கணியாய் நற்றரிக்கும் மணவாளன்
விறல்மருவு தொன்னூலின் வியாக்கியைகள் விரும்பீரே. 99

விருப்பமுடன் திருமாலை மேவியுள்ளே நைந்துருகி
இருக்குமகிழ் மாறனடி ஏத்தியருள் மாரியடிக்கு
உருக்கமுறும் எதிராசர் குணமகிழுந் தமிழ்மறையைப்
பெருக்கமுற ஓது மணவாளனடி பேணுநெஞ்சே. 100

நெஞ்சே திருமாலை நித்தியமும் அடிபணியும்
மஞ்சேறு குருகைமகிழ் மாறனடி பணிந்துய்ந்திங்கு
அஞ்சேலென்று எமக்கருளும் எதிராசன் அடிமருவு
நஞ்சேம வரமுனிவன் நண்ணுதிநீ நற்குணமே. 101

சீயர் திருவடிகளே சரணம்.